சாத்தனூர் கிராம மக்கள் மிகுந்த குடிதண்ணீர் பஞ்சத்திலே கஷ்டப்படுகிறார்கள். 2, 3 கிலோமீட்டர் சென்றுதான் குடிதண்ணீர் பெறுகின்ற நிலைமை இருக்கிறது. சாத்தனூரையும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் சேர்ந்தார்போல் சாத்தனூர் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து தச்சம்பட்டைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய ஊராட்சி ஒன்றியம் தொடங்க வேண்டும்.

விருதுவிளங்கினான் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, தாணிப்பாடி ஊராட்சியைத் தனி ஊராட்சியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அரசினர் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல். 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2000), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 3/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 29-3-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

2000 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை. பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2000) நிறைவேற்றப் பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2000), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நான் எதிர்க்கிறேன். காரண நோக்க விளக்கத்திலே "இந்த ஊராட்சிகளுக்கு யாரும் மனு போடுவதற்கு முன்வரவில்லை. ஆகவே, தேர்தல் நடத்தமுடியவில்லை. ஆகவே, இந்தத் தனி அதிகாரிகள் நியமிக்கப்படுகிறார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் விசாரித்த அளவிற்கு, இந்த ஊராட்சிகள் தலித் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட பகுதி என்று தெரிகிறது. இந்த மாமன்றத்திலே இருக்கிற அனைவருக்கும் நன்றாகத் தெரியும். ஏற்கெனவே, மதுரை மாவட்டத்திலே, மேலூருக்கு அருகே, மேலவளவு என்ற இடத்திலே மேல் ஜாதிக்காரர்கள்,

---

@ 28-3-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.